**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**CC.No.55/2023**

PW-2

| | | | |
|---|---|---|---|
| Name | முத்துராம்(PW2) | | |
| Husband's Name | முத்துப்பழனி | Calling | |
| Village | பழங்கரை | | |
| Taluk | அவிநாசி | Age | |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 02nd **day of March 2026** by Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused present)*

**முதல் விசாரணை:–**

10/06/2022 அன்று எப்பவும் போல் நான் என் பெண் குழந்தையையும் ஆண் மகனையும் கம்பெனிக்கு அழைத்து சென்றிருந்தேன்.நான் என் வீட்டில் இருந்து என் குழந்தைகளுக்காக பாதாம் பாலை பிளாஸ்கில் எடுத்துச் சென்றிருந்தேன் அங்கு டீ விற்கும் நபர் வந்திருந்தார் அப்போது அவரிடம் இருந்து பப்ஸ் வாங்கி கொடுத்தேன்.அங்கு எப்போதும் போல் குழந்தைகள் விளையாட வந்திருந்தார்கள் அவர்களுடன் சென்று விளையாடுவதற்கு நான் அனுமதித்தேன். பத்து நிமிடங்கள் கழித்து பார்த்தபோது என் குழந்தையை காணவில்லை.அதன் பின்னர் நான் அங்கு இருந்தவர்களிடம் என் குழந்தையை காணவில்லை என்று சொன்னேன் அங்கு அவர்கள் அக்கம் பக்கத்தில் என் குழந்தை சென்று விளையாடும் இடத்தில் தேடிப் பார்த்தார்கள். அங்கு இருந்தவர்கள் ஐஸ்கிரீம் விற்று வந்த நபர் வந்து சென்றார்அவர்கள் கூட என் குழந்தையை கடத்தி சென்று இருப்பார்கள் என்று சொன்னார்கள் அதனால் நான் போன் மூலமாக என் கணவருக்கு தகவல் சொன்னேன் பின்பு அங்கு என் குழந்தையை தேடிக் கொண்டிருந்தேன் அப்போது நான் வேலை செய்யும் கம்பெனிக்கு அருகில் நிலத்தொட்டி ஒன்று இருந்தது அந்த நிலத்தொட்டியில் தண்ணீர் கலங்கலாக உள்ளது என்று சொன்னார்கள் அப்போது கூட என் மகள் அதில் விழுந்திருக்க மாட்டார் என்று நான் சொன்னேன் ஆனால் அங்கு தேடி பார்த்த போது என் மகள் அந்த தண்ணீர் தொட்டியில் விழுந்து இருந்தால் அதை பார்த்தவுடன் எனக்கு மயக்கம் ஏற்பட்டது. அங்கு வேறு என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது.

**குறுக்கு விசாரணை எதிரி தரப்பில் :**

நான் என் குழந்தையை இரு சக்கர வாகனத்தில் கம்பெனிக்கு அழைத்து வருவேன் என்றால் சரிதான். மேற்படி கம்பெனியில் நான் கடந்த ஒன்றரை வருடமாக வேலை செய்து வருகிறேன். நான் வேலை செய்யும் கம்பெனிக்கும் சம்பவம் நடந்த இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் அடி கணக்கு எனக்கு தெரியாது சிறிது தூரம் இருக்கும். நான் பணிபுரியும் கம்பெனி எவ்வளவு பெரிதாக இருக்கும் என்றால் 10 க்கு 16 அளவு ரூம் இருக்கும் அதில் 4 மெஷின்கள் போடப்பட்டுள்ளது. நான் கம்பெனியில் வேலை பார்க்கும் போது

குழந்தைகள் இருந்தால் கதவை மூடிக்கொள்ள முடியும் என்றால் முடிக்கொள்ளலாம் அந்த வசதி கம்பெனியில் உள்ளது. காலை முதல் என் குழந்தையை என்னுடன் வைத்துக்கொண்டு கதவை பூட்டி வைத்து தான் பணி செய்து வந்தேன். என் குழந்தையை விட பெரிய குழந்தைகள் அங்கு விளையாடிக் கொண்டிருந்தார்கள் அதனால் அவர்களுடன் சென்று என் குழந்தை வெளியே விளையாடிக் கொண்டிருந்தார். என் குழந்தை கம்பெனியை விட்டு வெளியே சென்ற விபரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான் .என் குழந்தையை நான் சரியாக பராமரித்து இருந்தால் இந்த விபத்து நடந்திருக்காது என்றால் சரிதான்.

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N. Keerthana<br><br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |

| Free True copy of Deposition received | | |
|---|---|---|
| | | |
| Assistant Public Prosecutor | Witness | Accused/ Defence counsel |